# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்பு கல்விமாணித் தேர்வு

## 2013/2014 (March/April - 2019)

## EDS - 4123 ஒப்பீட்டுக்கல்வி (Comparative Education)

நேரம் 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி II இல் இருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

---

## பகுதி – I

01. (அ). ஒப்பீட்டுக்கல்வி என்றால் என்ன என்பதை பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமாக விளக்குக? (04 புள்ளிகள்)

(ஆ). ஒப்பீட்டுக்கல்வியினைக் கற்பதனால் ஏற்படக்கூடிய பயன்பாடுகளைக் குறிப்பிடுக? (05 புள்ளிகள்)

(இ). பல்வேறு நாடுகளுக்களின் கல்வி முறைகளை நிர்ணயிப்பதில் பங்கெடுக்கும் காரணிகளைச் சுருக்கமாக விளக்குக? (05 புள்ளிகள்)

02. (அ). பண்டைய கல்வி முறையின் நோக்கங்களைக் குறிப்பிடுக? (04 புள்ளிகள்)

(ஆ). புராதன கல்வி முறையில் குருகுலக் கல்வி முறையின் கலைத்திட்ட சிறப்பம்சங்களை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(இ). இலங்கையில் பின்வரும் ஆரம்பகால கல்வி நிலையங்கள் பற்றி சுருக்கமாக விளக்குக?

1. சிற்றூர் பள்ளிகள்
2. கோயிற்பள்ளிகள்
3. பிரிவேனாக்கள்

(06 புள்ளிகள்)

03. (அ). மன்னராட்சிக்கால பௌத்த கல்வி முறையின் சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக? (04 புள்ளிகள்)

(ஆ). போர்த்துக்கேயர் கால கல்வி நிறுவனங்களைக் குறிப்பிட்டு அவற்றின் கற்பித்தல் முறைகளையும் குறிப்பிடுக? (06 புள்ளிகள்)

(இ). உலக நாடுகளின் கல்வி முறைகளை சமூகவியல் அணுகுமுறையின் ஊடாக கற்றுக்கொள்வதால் கிடைக்கும் நன்மைகளைப் பட்டியற்படுத்துக? (04 புள்ளிகள்)

## பகுதி – II

04. (அ). ஒல்லாந்தர்கால கல்விக் குறிக்கோள்களைக் குறிப்பிட்டு அவை அக்கால க முறையில் எவ்வாறு பிரதிபலித்தது என்பதை ஆராய்க? (08 புள்ளிக

(ஆ). பிரித்தானியர் கால கல்வி வளர்ச்சியில் மிசனறிக் குழுக்கள் ஆற்றிய பணிக பகுப்பாய்வு செய்க? (08 புள்ளிக

(இ). 1865/70 காலப்பகுதியில் மோர்கன் குழுவினரால் முன்வைக்கப்பட்ட கல்வி தொடர்ப சிபார்சுகளைக் குறிப்பிடுவதுடன் அவற்றினால் பிற்பட்ட காலங்களில் கல்வித்துறை ஏற்பட்ட மாற்றங்களையும் விபரிக்குக? (08 புள்ளிக

05. (அ). டொனமூர் அரசியல் யாப்பின்படி உருவாக்கப்பட்ட நிர்வாகக் குழு முறை கல்விக்கென நிர்ணயிக்கப்பட்ட கல்விக் குழுவானது 1931 – 1947 வரையான காலப்பகுதி ஏற்படுத்திய கல்வி மாற்றங்களை பொருத்தமான சான்றாதாரங்களுடன் ஆராய்க? (09 புள்ளிக

(ஆ). 1961ம் ஆண்டு தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கையில் முன்வைக்கப்ப சிபார்சுகள் சுதந்திரத்திற்கு பிற்பட்ட கால கல்வி வளர்ச்சியில் எத்தகைய தாக்கத ஏற்படுத்தின என்பதை பகுப்பாய்வு செய்க? (08 புள்ளிக

(இ). 1972ம் அண்டு கல்வி புனரமைப்புச் சுற்று நிருபத்தில் "கல்வியின் புதிய பாதை" எ திட்டத்தினூடாக கொண்டு வரப்பட்ட கல்வி நடைமுறைகளை விளக்குக? (07 புள்ளிகள

06. (அ). பின்லாந்தின் கல்வி முறைகளில் ஆசிரியர்களின் கற்பித்தல் மற்று தொழில்வாண்மை என்பவற்றிற்காக மேற்கொள்ளப்படும் செயன்முறைகளை பரிசீலனை செய்க? (12 புள்ளிகள

(ஆ). விசேட தேவை உடையோருக்கு கல்வி வழங்குவதற்க்க மேற்கொள்ளப்பட்டு வரு நடவடிக்கைகளை தென்கிழக்காசிய நாடுகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக? (12 புள்ளிகள

07. (அ). இலங்கையின் கல்வி முறையில் தொழிற்கல்வியை மேம்படுத்த எத்தகை மாற்றங்களை உள்வாங்கலாம் என்பதனை ஐரோப்பிய நாடுகள் சிலவற்றின் படிப்பினைகளை ஆதாரமாகக் கொண்டு பகுப்பாய்வு செய்க. (12 புள்ளிகள

(ஆ). இலங்கையின் சமகாலக் கல்வி முறையில் ஆரம்பக்கல்வி மற்றும் இடைநிலைக்கல் தொடர்பாகக் காணப்படும் பிரச்சினைகளை உதாரணங்களுடன் முன்வைப்பதுடன் அதனை தீர்ப்பதற்கு நீர் கூறும் ஆலோசனைகளையும் பட்டியற்படுத்துக. (08புள்ளிகள

மொத்தப்புள்ளிகள் - 100 (பகுதி I - 28 , பகுதி II – 72)